# செங்கல்பட்டு நகராட்சி

## <u>சாதாரணக் கூட்டம்</u>

**<u>2018ம் ஆண்டு மே மாதம் 27 ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>**

---

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 8 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் 3 எண்ணிக்கை உறிஞ்சு கிணற்றின் மூலமாக மோட்டார்கள் இயக்கப்பட்டு தரைமட்ட தொட்டி 1.000 லட்சம் லிட்டர் கொள்ளளவு சேகரிக்கப்பட்டு, மேலும் தரை மட்ட தொட்டியிலிருந்து 60 எச்.பி மோட்டார் மூலம் செங்கல்பட்டு நகர பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு பணி தினந்தோறும் நடைபெற்று வருகிறது. எனவே மோட்டார்கள் மற்றும் ஸ்டார்ட்டர்கள் ஆட்கள் கொண்டு இயக்கும் பணி தனியார் திருவா. சன் ரைஸ் சோலார் சிஸ்டம், நிறுவனதின் மூலமாக 2017–18 வரையிலும் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கு 2018–19ம் ஆண்டுக்கான ஒப்பந்தபுள்ளி கோரும் வரையில் பணியில் கால நீடிப்பு செய்யவும் நகர மன்ற தீர்மான எண். 86 நாள் 27.3.2017ல் ஒப்புதல் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் திருவா. சன்ரைஸ் சோலார் சிஸ்டம் 6 மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்வதற்கான, அதற்கு உண்டான உத்தேச செலவு தொகைக்கு ரூ. 4.00 இலட்சத்திற்கும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றம் தணி அலுவலர் ஒப்புதலுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி செலவுச் தொகைக்கும் ஒப்பந்தபுள்ளி நீட்டிப்பு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 4

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட மாமண்டூர் நீரேற்று நிலையத்தில் மோட்டார் பம்பு இயக்குதல் பணிகளுக்கு நகராட்சி ஒப்பந்ததாரர் திருவாளர் குமரன் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் இந் நகராட்சியின் மூலம் வழங்க வேண்டிய தொகை வழங்காமல் இருப்பதையொட்டி செங்கல்பட்டு நீதி மன்றத்தில் இந் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். எல்.எஸ்.753/2018 மேலும் இந் நகராட்சியின் சார்பாக திரு சி. ஆர். வினாயகம் (ஜி.பி.) தொடர்ந்து 7 முறை வழக்காடி உள்ளார். அன்னாருக்கு ஒரு முறை அமர்வுக்கு ரூ.5000/– வீதம் ரூ.25000/– ஐ அன்னாருக்கு வழங்குவதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்–.1402/2014/இ2)

பொருள் – 5

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் நீரேற்றும் நிலையத்தில் உள்ள 160 கே.வி.எ. ஜெனரேட்டர், பழவேலி நீரேற்று நிலையத்தில் உள்ள 160 கே.வி.எ ஜெனரேட்டர் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 63 கே.வி.எ. ஜெனரேட்டர் ஆகியவை தற்போது பழுது காரணமாக மின் தடை ஏற்படும் காலங்கள் மற்றும் எதிர்வரும் கோடை காலங்களில் கூடுதல் மின் தடைகள் ஏற்படும் சமயங்களில் ஜெனரேட்டர்கள் இயக்க முடியாத சூழ்நிலையிலும் பொது மக்களுக்கு வழங்க.படும குடிநீர் பணி தடையின்றி விநியோகம் செய்யவும் மேற்படி 3 எண்ணிக்கை ஜெனரேட்டர்களை பராமரிப்பு பணி மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர மிகவும் அவசியம் என்பதால் ஒப்பந்தபுள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.0.75 இலட்சத்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.0312/2018/இ2)

பொருள் – 6

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 8 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் உறிஞ்சு கிணறு மூலமாக மோட்டார்கள் இயக்கப்பட்டு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி 1.00 லட்சம் கொள்ளளவு கொண்ட தொட்டியில் 60 எச்.பி. மின் மோட்டார் மற்றும் பம்பு மூலமாக இயக்கப்பட்டு செங்கல்பட்டு நகரிலுள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டி உள்ள ரேடியோமலை, சார் ஆட்சியர் அலுவலகம் அனுமந்தபுத்தேரி மற்றும் அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதில் 60 எச்.பி. மின் மோட்டார் மற்றும் பம்பு காயில் புதியதாக புதுபிக்கவும் மேலும் மின் வாரிய கோரியர் 200எ மெயின் பியூஸ் யூனிட் எரிந்துவிட்டமையால் அதற்கு பதிலாக 500எ பியூஸ் யூனிட் புதியதாக வாங்கி பொருத்தி இயக்குவதற்கான தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான பணிக்கு மன்றத்தில் முன் அனுமதி பெற்று ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 1041/2018/இ2)

பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் நீரேற்று நிலையத்தில் இயங்கி கொண்டிருந்து 80 எச்.பி. மோட்டாரினை இயக்குவதற்கு ஸ்டார்டர் 100 எச்.பி. திறன் கொண்ட புதிய ஸ்டார்டர் வாங்கி பொருத்துவதன் மூலமாக தற்போது பொது மக்களின் குடிநீர் தேவையினை சரி செய்யவும் மேற்படி 100 எச்.பி. ஸ்டார்ட்ர் புதியதாக வாங்கி பொருத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதால் ஒப்பந்தபுள்ளி கோரி பெற்று பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 0.85 இலட்சத்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (நக.எ.எண்.0046/2018/இ1)

பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சிக்க உட்பட்ட 7 முதல் 33 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை கடந்த 2 ஆண்டுகளாக திருவா சன்ரைஸ் சோலார் சிஸ்டம் என்ற தனியார் நிறுவனம் மூலம் தெரு விளக்குகள் 3969 எண்ணிக்கை இனவாரியாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியானது வரும் 31.3.2018 ல் முடிவடைய உள்ளதால் மீண்டும் ஒரு ஆண்டுக்கு தனியார் மூலம் மேற்படி 7 முதல் 33 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை தெரு விளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி தற்போது பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் திருவா. சன்ரைஸ் சோலார் சிஸ்டம், காஞ்சிபுரம் என்ற நிறுவனம் மூலம் அதே விலை விகிதத்தில் 1.4.2018 முதல் மேற்கொள்ளவும் அதற்காகும் தோரா செலவினம் ரூ.18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 403/2017/இ1)

பொருள் – 9

இந் நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்களுக்கு இரு சக்கர வாகன முன்பணம் ரூ.50,000/– வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள்.

1) திரு பி. ரகு, அலுவலக உதவியாளர்
2) திரு சி. சம்பத்/சந்திரன் – துப்புரவு பணியாளர் (பி–பிரிவு)

மேற்படி பணியாளர்களுக்கு வாகன முன்பணம் வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது நிதியில் இருந்து மேற்கண்ட இரு பணியாளர்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் வாகன முன்பணம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 1030/2018/பி1)

பொருள் – 10

இந் நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிக்கு 2016–17ம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகள் தயார் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவாக பெறப்பட்ட GSOFT SYSTEM என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், 2016–17ம் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்யப்பட்டு தணிக்கை முடிவு

பெற்றுள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை ரூ.80,000/—க்கு வழங்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் – 11**

இந் நகராட்சி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி / நகராட்சி பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி மற்றும் ஜி.எஸ்.டி. பிடித்தம் போன்றவை ஆன் லைன் பதிவு செய்ததற்கு தொகை ரூ—16,500/—வழங்குமாறு சேலஞ்சர் கன்சல்டன்சி சர்வீஸ், சென்னை என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 12**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 ல் புதிய பேருந்து நிலையம் அருகே பேரூந்து பணிமனை முன்பு செங்கல்பட்டு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தின் அருகே மின் வாரிய டிராஸ்பார்மர் இருப்பதாலும் உயர் அழுத்த மின்கம்பி மேலே செல்வதாலும் பொது மக்கள் மற்றும் கட்டுமான பணி சிரமமின்றி நடைபெற நிழற்குடையின் உயர் குறைக்கப்பட்டு Trus கொண்டு FRP Sheet கொண்டு நிழற்குடை அளவு குறைக்கப்பட்டதால் அதற்கான பணி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள முன் அனுமதி வழங்கப்படுகிறது. மன்றம் பின்னேற்பு வழங்கப்படுகிறது.

பொருள் – 13

செங்கல்பட்டு நகரம், பழைய பேரூந்து நிலையம் ஒட்டிய (மேட்டுத் தெரு) காந்தி சாலையில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக இரு பக்கங்களிலும் காய்கறிகள், மற்றும் பழங்கள் வியாபாரம் செய்பவர்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அவர்களை இரு பக்கங்களிலும் எல்லைகளை நிர்ணயிக்கும் பொருட்டு வர்ணம் ( Paint Marking ) செய்து போக்குவரத்தினை முறைப்படுத்திடவும், செங்கல்பட்டு நகரம், புதிய பேரூந்து நிலையத்தில் நகராட்சி கடைகளுக்கு முன்னர் எல்லைகளை வர்ணம் செய்து கட்டுப்படுத்தும் விதமாக மேற்படி இவ்விரு பணிகளுக்கும் தோராய செலவினத் தொகை ரூ. 50,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

செங்கல்பட்டு நகரம், காந்தி சாலை புதிய பேருந்து நிலையம், ஆகிய இரு இடங்களிலும் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக இருக்கும் எல்லைகளை கட்டுபடுத்தும் விதமாக வர்ணம் செய்ய மேற்படி செலவினத்திற்கான தொகை ரூ.50,000/–த்தை வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.014/2018/எப்1)

பொருள் – 14

செங்கல்பட்டு நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள செங்கல்பட்டு நகராட்சி வணிக வளாக கட்டிடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம் 10.7.2010 அன்று தீ விபத்தில் சேதமடைந்துள்ளதால் பொது மக்கள் நலன் கருதி இடிப்பதற்கு தனி அலுவலர் மன்ற தீர்மானம் எண். 302 நாள் 28.12.2017 அன்று அனுமதி பெற்று கட்டிடத்தை இடிப்பதற்கு நடைபெற்ற ஒப்பந்தபுள்ளி விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | காப்புறுதி தொகை | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடம் பழுதடைந்துள்ளதை இடித்து அப்புறப்படுத்தும் பணி. | ரூ.50,000/– | 1) திரு மதன்ராஜ்– ரூ.45578.91<br>2)திரு உதயகுமார்–ரூ.81399.83 |

அதிகமாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு உதயகுமார் அவர்களுக்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கவும், செலுத்தியுள்ள ரூ.50,000/–காப்புறுதி தொகையை தவிர்த்து மீதமுள்ள ரூ.31,399/–செலுத்தவும் மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 15

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 5, 6, 7,8, 9, 10 ஆகிய பகுதிகளுக்கு பழவேலி பாலாற்று நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந் நிலையில் 6 வார்டுகளில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 12368ஆகும். ஆனால் தட்டான்மலை பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டி மட்டுமே உள்ளது. இதனால் பொது மக்களுக்கு 4 நாட்களில் இருந்து 5 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் தட்டான்மலை கல்வாரிமலை பகுதியில் புதியதாக 4.00 லட்சம் லிட்டர் கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுவதற்கும், தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக 1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட சம்ப் கட்டுவதற்கும், அதற்கான பைப்லைன் பொருத்துவதற்கும் தோராய மதிப்பீடு

| | | |
|---|---|---|
| 1) | 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை தொட்டி | = ரூ.54.00 லட்சம் |
| 2) | 1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு சம்ப் மற்றும் பைப்லைன் | = ரூ.42.50 லட்சம் |
| | | =------------ |
| | | =ரூ.96.50 இலட்சம் |
| | | ------------- |

மேற்கண்ட மதிப்பீட்டு தொகை ரூ.96.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது மக்களின் நலன் கருதி பணிகள் செய்யவும் மேலும், ஐ.யு.டி.எம். திட்ட நிதியிலருந்து நிதி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 16

செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்தில் பதிவறையில் உள்ள பதிவுகளை முறையாக அடுக்கி பராமரிக்க பதிவேடுகள் பராமரிக்கும் பதிவறை ஒன்று சரியாக இல்லாததால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்கள் தெரிவித்துள்ள அறிவுரையின்படி அலுவலக மேல் மாடியில் பதிறைக்கென ஒரு தனி அறைக் கட்டி அதில் நிலை அடுக்கம் கொண்டு பராமரிக்க மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 17**

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் வருகை பதிவேட்டை பையோ –மெட்ரிக் ( Biometri-Machine )மூலம் பராமரிக்க தோராய மதிப்பீடு ரூ.40,000/– ஆகும். நகராட்சி பொது நிதி மூலம் பணி மேற்கொள்ள மன்ற பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 18**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21 ராமபாளையம் பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணற்றுக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.2.00 லட்சத்தை குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 19**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27 குண்டூர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.90 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) பொது சுகாதார பணியின் அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம்.

**பொருள் – 20**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்மா உணவத்தில் தரைதளம் பழுது மற்றும் இயந்திரங்கள், சமையல் உபகரணங்கள் பழுது பார்க்கும் பணிக்கு தேவைப்படும் தோராய மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம்.

**பொருள் – 21**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு புதியதாக front back and loader பெறப்பட்டுள்ளது. அதற்கு தேவைப்படும் சிறிய அளவிலான front back and loader Bucket Backhoe வாங்குவதற்கு தோராய மதிப்பீடு ரூ.46,000/–த்திற்கு பொது சுகாதார அவவர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

தூய்மை இந்தியா திட்ட நிதி அல்லது பொது நிதியின் கீழ் வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 22**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 பார்த்தசாரதி தெருவில் உள்ள ஆடு அறுவை கூடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 23**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட ரேடியோமலை மற்றும் முனிசிபல் காலனி பகுதியில் உள்ள பயன்பாடற்ற நம்ம டாய்லெட் யூனிட்டை இடித்து அகற்றிட அதற்கான பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6000/– ஆகும் என்பதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 24**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட ரேடியோமலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆன் சைட் கம்போஸ்டிங் ( onsite composting ) பணி மேற்கொள்ள அந்த பகுதியில் உள்ள இடத்தை செக்ஷன் செய்து கிராவல் அமைப்பதற்கு தோராய மதிப்பீடு ரூ.32000/– ஆகும் என்பதால் மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 25**

செங்கல்பட்ட் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 124 டி உட்பிரிவு (13)ன்படி மேற்படி சட்ட உட்பிரிவு (2)ன்படி அரசு நிர்ணயித்துள்ள தொழில்வரி விகிதங்களின்படி தற்போது விதிக்கப்படும் தொழில்வரி விகிதங்களை 1.10.2018 முதல் உயர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 12503/2018/ஆர்1 நாள் 21.5.2018ன்படி 1.10.2018 முதல் 35 சதவீதம் ஏற்கனவே உள்ள தொழில் வரியில் உயர்வு செய்யவும் அதிக பட்சமாக இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு கூறு 276(2)ன் படி தொழில்வரி அரையாண்டிற்கு ரூ.1250/– க்கு மிகாமல் கீழ்கண்ட பட்டியலின்படி மறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 1.10.2014 முதல் அமலில் ஏற்கனவே உள்ள தொழில் வரி | 1.10.2018 முதல் நிர்ணயம் செய்ய வேண்டிய தொழில் வரி |
|---|---|---|---|
| 1 | ரூ.21,000/– வரை | –– | –– |
| 2 | ரூ.21,001 முதல் 30,000 வரை | ரூ.136/– | ரூ.184/– |
| 3 | ரூ.31,001 முதல் 45,000 வரை | ரூ.343/– | ரூ.463/– |
| 4 | ரூ.45,001 முதல் 60,000 வரை | ரூ.683/– | ரூ.922/– |
| 5 | ரூ.60,001 முதல் 75,000 வரை | ரூ.1,026/– | ரூ.1,200/– |
| 6 | ரூ.75,001 முதல் அதற்கு மேல் | ரூ.1250/– | ரூ.1,250/– |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1211/2018/அ1)

**பொருள் – 26**

இந்நகராட்சியில் பணி ஒப்பந்ததாரராக உள்ள திரு. கே. ராஜகோபால் என்பவர் இந்நகராட்சிக்குட்பட்ட பழவேலி நீரேற்று நிலையத்தில் குளோரின் லிக்யுட் யூனிட் பொருத்தும் பணிக்கு கீழ்கண்டவாறு டென்டர் டெபாசிட் தொகை செலுத்தி பணி முடித்து பட்டியல் தொகை பெற்று விட்டதால், தற்போது டெபாசிட் தொகை திரும்ப வழங்குமாறு தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

1. செ.எண்.1514405 தொகை ரூ.10000/–
2. செ.எண்.1500230 தொகை ரூ.15000/–
3. செ.எண்.337883 தொகை ரூ.24000/–

மேலும் மேற்படி முடிக்கப்பட்டுவிட்டதாக நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குறிப்பு வழங்கி பொறுப்புத்தொகை திரும்ப வழங்கவும், மேற்படி பணியில் 2015–16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதால் மேற்படி மனுதாரரின் டெபாசிட் தொகையை ரூ.25000/–யை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 27

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–2019ம் நிதியாண்டில் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் பணிகள் செய்ய 25.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | திம்மாவரம் நீரேற்று நிலையத்தில் 2எச்பி புதிய மின் மோட்டார் பொருத்தி இயக்கும் பணி. | ரூ.0.18 இலட்சம் | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.34 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 0.80 அதிகம் |
| 2. | பழவேலி நீரேற்று நிலையத்தில் நீர் ஆதார கிணற்றுக்கு HDPE கசிவு நீக்கும் பணி | ரூ.0.20 இலட்சம் | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.68 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 2.38 அதிகம் |
| 3. | மாமண்டுர் பழவேலி திம்மாவரம் செங்கல்பட்டு நகரம் பூஸ்டர் நிலையங்களுக்கு மின் மோட்டார் சப்ளை செய்யும் பணி | ரூ.5.00 இலட்சம் | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.08 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 0.13 அதிகம் |

அலுவலக குறிப்பு–

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 28**

செங்கல்பட்டு நகராட்சியில் **2018–2019**ம் நிதியாண்டில் குடிநீர் நிதியின் கீழ் பின் வரும் பணிகள் செய்ய **30.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை சாதாரண நகரமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | மாமண்டூர் பம்பு மோட்டார் இயக்கும் பணிக்கு ஆட்கள் நியமிக்கும் பணி | ரூ.14.00 இலட்சம் | கே. ராஜகோபாலன் | 1.34 குறைவு |
| | | | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.95 அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்கலாம்.

**பொருள் – 29**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட செங்கல்பட்டு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி வளாகத்தில் DAY-NULM திட்டத்தின் கீழ் ரூ.**108.00** இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு தங்குமிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக நான்காவது திட்ட அனுமதி குழுவில் **26.12.2017** அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து **13.04.2018** அன்று தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு **04.05.2018** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு,

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள செங்கல்பட்டு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி வளாகத்தில் NULM திட்டத்தின் கீழ் சிறப்பு தங்குமிடம் கட்டும் பணி | ரூ.108.00 இலட்சம் | 1. கே.எல்.கே. கன்ஸ்ட்ரக்ஷன்<br>2. எல்.பி. கன்ஸ்ட்ரக்ஷன் |

**07.05.2018** அன்று தொழில் நுட்ப அனுமதி சரிபார்க்கப்பட்டதில் திரு. கே.எல்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் மட்டுமே தொழில் நுட்ப தகுதி இருப்பதால் அதன் பினான்ஸ்ஷியல் பிட் **11.05.2018** அன்று திறக்கப்பட்டது. கே.எல்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் **6.46** சதவீதம் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் விகிதத்தை குறைத்து வழங்க

நெகோஷியேஷன் கடிதம் கொடுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விகிதிம் குறைத்து வழங்கப்பட்டதன் விவரம்,

கே.எல்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் 4,96 சதவீதம் அதிகம் DAY-NULM திட்டப்பணியில் மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றபொருள் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மதிப்பீட்டைவிட கூடுதல் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணி உத்திரவு வழங்குவதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் – 30**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் பணிகள் செய்ய 29.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டுர் நீரேற்று நிலையத்தின் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யும் பணி 2018–2019ம் ஆண்டு | ரூ.5.00 இலட்சம் (ஐந்து இலட்சம்) | கே. ராஜகோபாலன் | 1.09 குறைவு |
| | | | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 2.04 அதிகம் |
| 2. | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி நீரேற்று நிலையத்தின் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யும் பணி 2018–2019ம் ஆண்டு | ரூ.5.00 இலட்சம் (ஐந்து இலட்சம்) | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.04 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 0.24 அதிகம் |
| 3. | செங்கல்பட்டு நகராட்சியின் திம்மாவரம் நீரேற்று நிலையத்தின் மின் மோட்டார்கள் பழுது நீக்கம் | ரூ.3.00 இலட்சம் (மூன்று இலட்சம்) | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.05 குறைவு |
| | | | ஆனந்த் | 0.55 அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யும் பணி 2018–19ம் ஆண்டு | | என்டர்பிரைஸஸ் | |
| 4. | செங்கல்பட்டு நகராட்சியின் தட்டான்மலை நீர் ஆதார கிணற்றுக்கு 150 மீட்டர் 3 1/2’50 சமிமி கேபிள் அமைக்கும் பணி | ரூ.0.75 இலட்சம் | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.19 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 0.38 அதிகம் |
| 5. | வடமலை அருகில் நீர் தேக்க தொட்டி பூஸ்டர் நிலையத்தில் பழைய 12.5 எச்.பி. மின் மோட்டார், 15எச்பி மின் மோட்டார் புதியது பொருத்தி இயக்கும் பணி | ரூ.2.91 இலட்சம் | அப்பல்லோ என்டர்பிரைஸஸ் | 0.07 குறைவு |
| | | | ஆனந்த் என்டர்பிரைஸஸ் | 0.31 அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம், 29.05.2018 அன்று பெறப்பட வேண்டிய ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் விடுமுறை காரணமாக 30–05.2018 அன்று திறக்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 31

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தூக்குமரக்குட்டை பகுதியில் உள்ள நகராட்சி உர கிடங்கில் பழுதடைந்த பொருட்களை ஏலத்தில் விட நிர்வாக அனுமதி 403, 27.04.2018 அன்று பெறப்பட்டு பணிக்கு 30.05.2018 பெறப்பட்டு ஒப்பந்த புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|
| 1. | நகராட்சி உரகிடங்கில் இருந்த பழுதடைந்த AC Sheet, Circular colum purlin போன்றவற்றை ஏலம் விடுதல் பணி | ரூ.20000/– | ஆஷிக்பாஷா ரூ.22700/– |
| | | | கண்ணன் ரூ.20200/– |

ஏலத்தொகை அதிகமாக செலுத்தியுள்ள திரு. ஆஷிக்பாஷா, அவர்கள் மீதத்தொகை ரூ.2700/—ஐ செலுத்தவும், பணம் செலுத்திய பின் பணி உத்திரவு வழங்கவும் மன்ற பொருள் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 32

செங்கல்பட்டு நகராட்சிக்கு 2018—19ம் ஆண்டிற்கு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 1 முதல் 17 பணிகளுக்கு 65.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் கீழ் கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே கீழ் கண்ட பணிகள் குறித்து மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.1 அன்னை அஞ்சுகம் நகரில் ஆழ்துறை கிணறு, மின் விசை பம்பு மற்றும் குடிநீர் தொட்டி அமைத்தல் | ரூ.300000/— |
| 2. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.2 சமுதாய கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் அமைத்தல் | ரூ.500000/— |
| 3. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.5 சின்ன ரத்தினம் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | ரூ.300000/— |
| 4. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.8 தட்டான் மலை மற்றும் தூக்குமரக்குட்டை பகுதியில் ஆழ்துளை கிணறு மின் விசை பம்பு மற்றும் குடிநீர் தொட்டி அமைத்தல் | ரூ.300000/— |
| 5. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண் 9 கே.கே. தெருவில் ஆழ்துளை கிணறு மின்விசை பம்பு மற்றும் குடிநீர் தொட்டி அமைத்தல் | ரூ.200000/— |
| 6. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.10 படிக்கட்டு தெருவில் சிறு பாலம் மற்றும் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் | ரூ.400000/— |
| 7. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.13 அண்ணா சாலையில் ஆழ்துளை கிணறு, மின்விசை பம்பு மற்றும் குடிநீர் தொட்டி அமைத்தல் | ரூ.200000/— |
| 8. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.13 மலைப் பூங்கா மற்றும் மக்கான் தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.300000/— |
| 9. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.18 சின்ன மணியக்காரத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | ரூ.500000/— |

| | | |
|---|---|---|
| 10. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.20 முருகேசனார் தெருவில் சிமென்ட் சாலை மற்றும் வடிகால்வாய் அமைத்தல் | ரூ.300000/— |
| 11. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.21 இராமபாளையம் சுடுகாடு தெருவில் மழை நீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல் | ரூ.400000/— |
| 12. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.22 குப்புசாமி தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.400000/— |
| 13. | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.27 குண்டுர் பரமேஸ்வரம் தெருவில் சிமென்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | ரூ.400000/— |
| 14 | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.29 சுமை தூக்கும் தொழிலாளர் குடியிருப்புக்கு சிமென்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | ரூ.500000/— |
| 15 | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.31 தீயணைப்பு நிலையம் அருகில் உள்ள சாலையினை சிமென்ட் கான்கிரிட் சாலையாக அமைத்தல் | ரூ.400000/— |
| 16 | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.32 அழகேசன் நகர் பேருந்து நிழற்குடை பின்புறம் தார் சாலை அமைத்தல் | ரூ.500000/— |
| 17 | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.33 அண்ணா நகர் 4வது குறுக்கு தெருவிற்கு முதல் மெயின் ரோடு தார் சாலை அமைத்தல் | ரூ.600000/— |
| | மொத்தம் | ரூ.6500000/— |

அலுவலக குறிப்பு

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

பொருள் – 33

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்குவதால் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகரில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நில வேம்பு கசாயம் வழங்க வேண்டி சுமார் 1000 கிலோவினை அரசு TAMPCOL Chennai ஒப்பந்த புள்ளி பெற்று வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.360000/— இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2277/2017/எச்1)

பொருள் – 34

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் தினசரி குப்பைகள் அல்ல பயன்படும் ABC வண்டி ஆட்டோ எண்.டி.என்.19எல் 6946 வாகனத்தில் உள்ள நான்கு டயர்களும் பழுதடைந்து உள்ளதால் நான்கு டயர்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.10000/–க்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

பொருள் – 35

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள தெரு நாய்களை பிடிப்பதற்கு ரூ.0.50 இலட்சம் தோராய தொகையில் பணியினை மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.375 நாள் 22.03.2018ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 11.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ் கண்டுள்ள 2 ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி | கோரப்பட்ட புள்ளி | வைப்புத்தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | Madras From Equipments | 70000/– | 500/– | 338/– |
| 2. | Kaveri Implements | 49700/– | 500/– | 338/– |

மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.2ல் கண்டுள்ள Kaveri Implements என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3442/2012/எச்1)

பொருள் – 36

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் மினி லாரி டிஎன்.19ஜே1812க்கு தகுதி சான்று பெற வேண்டி உள்ளதால் அதில் உள்ள பழுதுகள் சரி செய்ய தோராய செலவினம் ரூ.0.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. பொது சுகாதார வாகனம் என்பதால் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் – 37

இந்நகராட்சியின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஈப்பு வாகனம் டிஎன்21டி 7583 தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்நிலையில் நகர் நல அலுவலர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக வாகனம் ஏதும் இல்லாத காரணத்தால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதினை சரி செய்து பயன்படுத்தி கொள்ளவும் இதற்காகும் தோராய செலவினம் ரூ.0.50 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியின் கீழ் செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2277/2017/எச்1)

பொருள் – 38

இந்நகராட்சியின் ஆணையர் அவர்கள் பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் டிஎன்.19ஜே3325 பழுதினை நீக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. Kaveri Implements - ரூ.9850/–
2. Madras From Equipments - ரூ.18000/–

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 Kaveri Implements நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.9850/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

**பொருள் – 39**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் தினசரி குப்பைகள் அள்ளப்பயன்படும் டம்பர் பிளேசர் வண்டி எண்.டிஎன்.21ஏஓய் 8890க்கு 2018–19ம் ஆண்டிற்கான 1. சாலைவரி கட்டணம் ரூ.8850/– RTO, Chengalpattu, 2. காப்பீட்டுத்தொகை ரூ.30786/– இந்தியா இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட் வங்கி காசோலை மூலம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

**பொருள் – 40**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் தினசரி குப்பைகள் அள்ளப்பயன்படும் வண்டி எண்.டிஎன்.21ஏடபில்யூ 1525 ஆட்டோ பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி வாகனத்தில் உள்ள பழுதினை சரி செய்து பயன்படுத்திக் கொள்ளவும், இதற்க்கு ஆகும் தோராய செலவினம் ரூ.0.43 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

பொருள் – 41

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்கநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேவையான அறிவுரைகள் வழுங்கி உள்ளதால் போர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ள 50 மகளிர் சுயஉதவிக்குழு மூலமாக (டிபிசி) தற்காலிக பணியாளர்களை நியமித்து கொள்ளவும் 50 நபர்களுக்கு ஒரு நாள் ஊதியம் ரூ.320/– வழங்க மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களின் உத்திரவின்படி கடித ந.க.எண்.14576/2014/டி2 நாள் 24.06.2016ன்படி 50 நபர்களுக்கு தினசரி ரூ.320/– வீதம் 90 நாட்களுக்கு மட்டும் நியமித்து கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1440000/– ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2012/எச்1/2016)

பொருள் – 42

செங்கல்பட்டு நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாநில பேரிடர் நிதி (2018–19)ன் கீழ் Temporary Restoration of Road damages in the Urban Local Bodies நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களின் செயல்முறை தேதிய 13.03.2018ன்படி இந்நகராட்சிக்கு மேற்கண்ட பணிக்காக ரூ.18.78 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி வார்டு எண்.1 ஜேசிகே நகர், அளகேசன் நகர் மெயின் ரோடு மற்றும் அளகேசன் நகர், அனுமந்தபுத்தேரி பகுதிகளுக்கு ரோட் பேட்ச் ஒர்க் செய்யும் பணிக்கு ந.க.எண்.1053/2018/இ1 நாள் 04.05.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜேசிகே நகர், அளகேசன் நகர் மெயின் ரோடு மற்றும் அளகேசன் நகர், அனுமந்தபுத்தேரி பகுதிகளுக்கு ரோட் பேட்ச் ஒர்க் செய்யும் பணி | ரூ.18.78 இலட்சம் | 1. விமலாபாய் கன்ஸ்ட்ரக்ஷன் | 0.08 சதவீதம் குறைவு |
| | | | 2. எம். சந்திரன் | 2.56 சதவீதம் குறைவு |
| | | | 3. கோபி | 1.82 சதவீதம் குறைவு |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 43**

நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் 06.12.2017ம் தேதியிட்ட கடித ந.க.எண்.5064/2017 செ.ம.3 கடிதத்தில் நகராட்சி வார்டு 3 பிளாக் எண்.26 ந.அ.எண்.107ல் மொத்த பரப்பு 3825.5 ச.மீ. இடத்தில் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ளது. அனுமதி எண். ம.வ/ந.ஊ.து.இ(செ.ம) எண்.218(ஆர்) 2017 நாள் 06.12.2017

மேற்படி மனை பிரிவில் உள்ள மனைகளை வரன் முறைப்படுத்த மனை உரிமையாளருக்கு அறிவிப்பு ந.க.எண்.276/06/எப்1 நாள் 23.03.2018ல் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை பகுதி தான பத்திர எண்.194/2016 நாள் 02.03.2016 (10017 ச.அடி) நகராட்சிக்கு ஒப்படைக்க நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி மனை பிரிவில் உள்ள சாலை பகுதி 1–446 ச.அடி சாலை நீடிப்பு –2 549 ச.அடி மற்றும் திறந்த வெளி ஒதுக்கீடு இடம் 1621 ச.அடி இடத்தினையும் தானமாக நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய விருப்பம் தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

நகர ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களால் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதால் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை நீடிப்பு மற்றும் திறந்த வெளி இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3424/2017/எப்1

**பொருள் – 44**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் மற்றும் பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டாகள் இயக்கத்தின் மூலம் தினந்தோறும் குடிநீர் செங்கல்பட்டு நகரின் உள்ள மேல்நிலைத்தொட்டி மற்றும் ஜிஎல்ஆர் நீரேற்றும் செய்யப்பட்டு வார்டு 1 முதல் 33 வார்டுகளுக்கு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி நீரேற்று

நிலையத்திலிருந்து பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு சோடியம் ஹைட்ரோ குளோரைடு திரவ குளோரின் பிளாக்குடன் அமைக்கப்பட்ட திரவ குளோரின் விநியோகம் செய்து குடிநீருடன் கலந்து அனுப்பப்படும். எனவே அவசர அவசியம் கருதி பொது மக்கள் நலன் கருதியும் அதற்கான ஓராண்டு பராமரிப்பு (குளோரின் சப்ளை மோட்டார் பழுதுகள்) பணிகளுக்கு ஆகும் தோராய செலவு ரூ.12.00 இலட்சத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.0678/2018/இ2)

**பொருள் – 45**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமன்டூர் நீரேற்று நிலையத்திலிருந்து சப் கலெக்டர் பங்களா அளகேசன் நகர் பைபாஸ் சப்ளை, பெரிய மணியக்கார தெரு ஓஎச்டி, ரேடியோமலை நீர் தேக்க தொட்டி ஆகிய பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 2.4 எம்எல்டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட வருகிறது. தற்போது பாலாறு படுகையில் நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்டதால் 8 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மிகவும் குறைவாக வருகிறது. இதனால் நீர் தேக்க தொட்டிகள் நிரப்ப முடியவில்லை குடிநீர் விநியோகம் செய்ய சிரமமாக உள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி பாலாறு படுகையில் உள்ள நீர் ஆதார கிணற்றில் புதியதாக மோட்டார், பைப் மற்றும் கேபிள் அமைத்த நீர் ஊற்றும் நிலையத்திற்கு குடிநீர் விநியோகம் சீராக செயல்படுத்தலாம். இதற்கான தோராய செலவுகள் ரூ.9.40இலட்சத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1202/2018/இ1)

**பொருள் – 46**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். (எம்.எஸ்) எண். 166 நாள் 23.11.2016ல் இந் நகராட்சிக்குட்பட்ட அரசு / நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்ய வேண்டி தனியார் மூலம் பராமரித்தல் அதற்கான செலவினம் ஆட்கள் நியமனம் இப் பணிக்கான பொருட்கள் வழங்குதல் குறித்து உரிய வழிமுறைகளை கையாளும் முறைகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) அந்தந்த நகராட்சிகுட்பட்ட அரசு / நகராட்சி தொடக்க / நடுநிலை / மேல் நிலை பள்ளிகளுக்கு மட்டுமே பொருந்தும்.
2) இதற்கான செலவினத்தை நகர்புற உள்ளாட்சி வசூலிக்கும். கல்வி வரி (Education cess ) மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதியில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.
3) ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்ய தேவையான பொருட்கள் வாங்குதல் மற்றும் அதனை பராமரித்தல் குறித்து அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள், அந்தந்த பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை கூட்டி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4) ஒவ்வொரு பள்ளிக்கும் தேவையான துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய அன்றாடப் பணிகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் தெரிவிக்கப்பட்ட (Model Pid document ) மூலம் ஒப்பந்தபுள்ளி இணைய தளத்தில் கோர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**I – தனியார் மூலம் பள்ளியில் இப் பணி மேற்கொள்ள வேண்டிய திட்ட வழிமுறைகள்–**

1) இப் பணியினை மேற்கொள்ளும் தனியார் நிறுவனம் ஒவ்வொரு பள்ளியிலும் வாரம் ஒரு முறை கழிவறைகள் சுத்தம் செய்யப்பட்ட விதம், வகுப்பறைகள் சுத்தம் செய்யப்பட்ட விதம், மாணவர்கள் உணவு உண்ணும் இடங்கள் மற்றும் மின்சாதன வசதிகள் குறித்த விவரங்களை மிக கவனமாக கண்கானிக்க வேண்டும்.
2) இப் பணியினை மேற்கொள்ள பதிவு செய்யப்பட்ட சமுதாய தொண்டு நிறுவனங்கள் / சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு டெண்டரில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
3) இப் பணி உள்ளாட்சி மற்றும் பள்ளி நிறுவனம் கூட்டு சேர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
4) இதற்கான ஆட்கள் நியமிக்கும் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் நியமிக்க வேண்டும்.
5) இதற்கான பொருட்களை கழிவறைகள் எண்ணிக்கை பொறுதே ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
6) இப் பணிக்கு துப்புரவு பணியாளர்கள்/மேற்பார்வையாளர் தனியார் மூலம் நியமிக்க வேண்டும்.
7) ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தபட்சம் 1 பெண் மற்றும் 1 ஆண் பணியாளர்கள் அமர்த்த வேண்டும்.

8) பெண்கள் பள்ளியாக இருந்தால் 2 பெண் பணியாளரை அமர்த்த வேண்டும். அவர்களிலேயே ஒருவர் துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டும்.

9) ஆண்கள் பள்ளியாக இருந்தால் 2 ஆண் / பெண் பணியாளர்களை அமர்த்த வேண்டும்.

10) தினசரி பணியினை மேற்கொள்ளும் போது அதற்கான பதிவேடு ஒன்றினை பராமரித்து அதில் அப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் கையொப்பம் பெற வேண்டும்.

11) ஒவ்வொரு பள்ளியினையும் சுத்தம் செய்ய பயன்படுத்தும் பொருட்கள் குறித்த விவரம் தனி பதிவேட்டில் பதிய வேண்டும்.

12) மேற்கண்ட பணியினை தனியார் நிறுவனம் சரி வர மேற்கொள்ள வில்லை என்றால் அவர்களின் உரிமத்தை ரத்து செய்யலாம்.

13) இப் பணியினை மேற்கொள்ளம் தனியார் நிறுவனத்திற்கு மாதாந்திர தொகை வழங்கும் போது அப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஒப்புதல் பேரில் வழங்க வேண்டும்.

14) இப் பணியினை மேற்கொள்ளும் தனியார் நிறுவனமே ESI, PF, Uniform, Safety Eqauipments ஆகியவை ஏற்பாடு செய்ய வேண்டும்.

**I I – பணி மேற்கொள்ளும் முறைகள்–**

1) இப் பணியினை மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்கள் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு முடியும் வரையில் பணி செய்ய வேண்டும்.

2) பணியாளர்கள் பள்ளியில் முற்பகல் 3 முறையும் பிற்பகல் 2 முறையும் தினசரி சுத்தம் செய்ய வேண்டும்.

3) கழிவறைகள் சுத்தம் செய்யும் பணியாளர்கள் தினசரி காலை மற்றும் மாலையிலும் கழிவறைகளை சுத்தம் செய்ய வேண்டும்.

4) ஒவ்வொரு பள்ளிக்கும் (பணியாளர்களும்) பெனாயில், கழிவறை பிரஷ், ஆசிட், துடைப்பம், கை உறை, முக உறை போன்ற பொருட்களை கண்டிப்பாக வழங்க வேண்டும்.

5) மகளிர் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணியாளர்கள் நாப்கின் போன்ற பொருட்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும்.

எனவே மேற்கண்ட வழிமுறைகள் படி இந் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் பள்ளியினை தூய்மை படுத்தவும் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணியாளர்கள் குறித்து கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண். | பள்ளியின் பெயர் | மொத்த பணியாளர்கள் (ஆண்/பெண்) |
|---|---|---|
| 1 | அரசினர் மகளிர் மேல் நிலை பள்ளி | 3 |
| 2 | அறிஞர் அண்ணா நகராட்சி ஆண்கள் மேல்நிலை பள்ளி | 3 |
| 3 | வடமலை நகராட்சி நடுநிலை பள்ளி | 3 |
| 4 | அனுமந்தபுத்தேரி நகராட்சி ஆரம்ப பள்ளி | 3 |
| 5 | நத்தம் நகராட்சி ஆரம்ப பள்ளி | 3 |
| | **ஆண்கள் = 9, பெண்கள் = 6 மொத்தம் = 15** | |

**செலவினக் கணக்கீடு–**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி நிர்ணயம் ரூ.346/–

மேற்படியான செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேலும் இப் பணி குறித்த செய்தி தாள் விளம்பர செலவினம் பொது நிதி மூலம் செய்வதற்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 3388/2017/எச்1)

**பொருள் – 47**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட க.எண். 29 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள குத்தகை கடை திரு எஸ்.எம்.பாபு என்பவர் பெயரில் உள்ளது. மேலும் 9 ஆண்டுகள் குத்தகை உரிமம் முடிவடைந்த கடைகளுக்கு தற்போது அங்காடி மதிப்பிட்டில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குத்தகை கடையின் குத்தகைதாரர் திரு எஸ்.எம்.பாபு என்பவர் அவரது நண்பர் திரு ரமேஷ்குமார்(லேட்) என்பவருக்கு மேற்படி கடையினை அனுபவித்துக் கொள்ளவும் அவரது பெயரில் பெயர் மாற்றம் செய்து கொள்ளவும் சம்மதித்து முத்திரைத்தாள் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார். எனவே திரு ரமேஷ்குமார் என்பவர் இறந்து விட்டதால் அவரது மனைவி திருமதி ஆர். மீனாட்சி என்பவர் அவரது பெயருக்கு மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்து தர கோரியுள்ளார். மேலும் அரசானை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.7.2007 ன்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒரு முறை மட்டும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றிதரலாம் எனவும், இதற்காக ரூ.2500/– பெயர் மாற்றக் கட்டணம் பெற்றுக் கொண்டும், 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன் பணமாக பெற்ற நகர் புற ஊராட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் வாடகை குத்தகை தொகையை செலுத்த ஒப்புக்கொள்ளம்

நிபந்தனைக்குட்பட்டு குத்தகை பெயர் மாற்றம் செய்யலாம் என குறிப்பிட்டுள்ளதின் பேரில் திருமதி ஆர். மீனாட்சி என்பவர் பெயருக்கு மேற்படி குத்தகை கடையினை பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 1621/2017/அ1)

பொருள் – 48

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் விநியோக விதிகள் 1920 ம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படி உள்ள பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகளில் தற்போது அடுக்குமாடி கட்டிட இணைப்புகளுக்கு உள்ள குடிநீர் இணைப்புகளை கீழ்கண்டவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கிடவும்

1) 4 குடியிருப்பிற்கு = 1 எண்ணிக்கையும்
2) 5 முதல் 8 குடியிருப்பிற்கு = 2 எண்ணிக்கையும்
3) 9 முதல் 12 குடியிருப்பிற்கு = 3 எண்ணிக்கையும்
4) 13 முதல் 16 குடியிருப்பிற்கு = 4 எண்ணிக்கையும்
5) 17 முதல் 20 குடியிருப்பிற்கு = 5 எண்ணிக்கையும்
6) 21 முதல் 40 குடியிருப்பிற்கு = 6 எண்ணிக்கையும்
7) 41 முதல் 70 குடியிருப்பிற்கு = 7 எண்ணிக்கையும்
8) 70க்கு மேற்கொண்ட குடியிருப்பிற்கு = 8 எண்ணிக்கையும்

வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் துணை விதிகளில் உரிய திருத்தம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.